இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 16.10.2026

யூனிட்டுக்கு 35 ரூபாய்

பாட்டிலுக்குப் பத்து ரூபாய் என்று பாடினார் விஜய். 'யூனிட்டுக்கு 35 ரூபாய்... யூனிட்டுக்கு 35 ரூபாய் என்று பாடலாமா?' என்று கேட்கிறார் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி. உண்மையில், 'யூனிட்டுக்கு 35 ரூபாய்' என்றுதான் பாட வேண்டும். இதுதான் தூயசக்தியின் ஆட்சி.

இதற்காகத்தான் திட்டமிட்டு மின்சாரத் தட்டுப்பாட்டை உருவாக்கி இருக்கிறார்கள். 'மின்சாரம் இல்லை' என்று மக்களைக் கதற வைத்துள்ளார்கள். 'வெளிமார்க்கெட்டிலாவது வாங்கித் தரக்கூடாதா?' என்று அனைவரையும் கேட்க வைத்துள்ளார்கள். 'இதோ பார் வெளி மார்க்கெட்டில் வாங்கிவிட்டோம். அவர்கள் யூனிட்டுக்கு 35 ரூபாய் கேட்கிறார்கள்' என்று மக்களை நம்ப வைக்க முயற்சித்தார்கள். கொள்ளையோ கொள்ளையை பட்டவர்த் தனமாக நடத்தி விட்டு ஆந்திராவுக்கு நவராத்திரி விழா பார்க்க பட்டு வேட்டி சட்டையில் போய்விட்டார் முதலமைச்சர்.

"இந்த ஊழல் டீல் முடிக்கத்தான் பக்கத்து மாநிலத்துக்குப் பறந்து இருக்கிறாரா பஞ்ச் டயலாக் சி.எம்.?" என்று கேட்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி. வழக்கம் போல் இதற்கும் பதில் வரப் போவது இல்லை. காது கேட்காதது போல இருந்து காரியத்தை முடிக்கப் பார்க்கிறார்கள் முதலமைச்சர் விஜய்யும், மின் துறை அமைச்சர் சர்வதேச சங்கியான நிர்மல் குமாரும்.

த.வெ.க. அரசு கையாலாகாத அரசாங்கம்தான் என்பதை முதலில் அம்பலப்படுத்தியது மின்வெட்டில்தான். "இந்த ஆட்சியில் ரெண்டே பேருக்கு நடுவுலதான் போட்டியே... ஒன்னு மின்வெட்டு! இன்னொன்னு அரிவாள் வெட்டு" என்றார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின். அந்தளவுக்கு விஜய் ஆட்சிக்கு வந்த முதல் நாள் முதல் தொடங்கி விட்டது மின்வெட்டு.

மக்களை நிம்மதியாகத் தூங்க விடாமல் ஆக்கினார் விஜய். வீதிக்கு வந்து போராடினார்கள் மக்கள். மின்வாரிய அலுவலகங்களை முற்றுகையிட்டார்கள். சாலை மறியல் செய்தார்கள். ஆனாலும் அதற்கான தீர்வை அரசாங்கம் செய்யவில்லை. வாயைத் திறந்தாலே பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடும் அமைச்சர் நிர்மல்குமார், தினமும் ஒரு காரணத்தைச் சொன்னார்.

- **தி.மு.க.வினரால் மின்வெட்டு ஏற்படுத்தப்படுகிறது.**
- **மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு சில ஊழியர்களால் திட்டமிட்டு மின்வெட்டு ஏற்படுகிறது.**
- **பியூஸ் கட்டையைத் திருடிச் சென்று விடுவதால் மின்வெட்டு ஏற்படுகிறது.**
- **மின் துறை ஊழியர்கள் மத்தியில் 1 விழுக்காடு ஊழியர்கள் கருப்பு ஆடுகள். அவர்களால் மின்வெட்டு திட்டமிட்டு நடத்தப்படுகிறது.**
- **பி.எஸ்.என்.எல். கேபிள் பணிகளுக்காக தோண்டுவதால் மின் வெட்டு ஏற்படுகிறது இவை அனைத்தும் அமைச்சர் நிர்மல் குமார் சொன்ன பொய்கள். மின்சார ஊழியர்கள் மீதே அத்தனை பழியையும் தூக்கிப் போட்டார் அவர்.**
- **காற்று அடிப்பது குறைவாக இருக்கிறது. அதனால் காற்றாலை மின்சாரம் கிடைக்கவில்லை" என்று காற்றையே குறை சொன்னார் அமைச்சர் செங்கோட்டையன்.**
- **மழை குறைந்ததால் தண்ணீரில் இருந்து வரும் மின்சாரம் குறைந்திருக்கிறது. காற்று நின்று போனதால் அந்த மின்சாரமும் கிடைக்கவில்லை என்று மழையையும் காற்றையும் சேர்த்துக் குறை சொன்னார் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா.**

இவர்கள் ஆட்சிக்கு வந்ததும் இயற்கையே சதி செய்வதைப் போல பேசினார்கள். இந்த மாதிரி புத்திசாலிகளை எல்லாம் எங்கிருந்துதான் பிடித்தார்களோ! மொத்தப் பேரும் த.வெ.க. அமைச்சரவையில்தான் இருக்கிறார்கள். இதுபோன்றகதைகளைவிட்டுமக்களைதிசைதிருப்பிக்கொண்டே கொள்ளையடிப்பதில் கவனமாக இருந்துள்ளார்கள் என்பதை அம்பலப்படுத்தி இருக்கிறது மின் கொள்முதல் ஊழல்.

தி.மு.க. ஆட்சி காலத்தில் தனியாரிடம் இருந்து மின்சாரம் வாங்கியதை முறைகேடு என்று சொன்னார் விஜய். 'தி.மு.க. ஆட்சியில் இவர்களே திட்டமிட்டு மின் தட்டுப்பாட்டை உருவாக்குகிறார்கள், அப்படிச் செய்தால் தான் வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு மின் கொள்முதல் செய்ய முடியும், கொள்ளை அடிக்க முடியும்' என்று பேசினார் விஜய். அன்று அவர் சொன்னதைத்தான் இன்று அவர் செய்து கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை மிகமிக அதிக விலைக்கு வாங்க இருக்கிறார்கள். இந்தியாவிலேயே அதிக விலைக்கு மின்சாரம் வாங்கும் செயலைச் செய்ய இருக்கிறார்கள். இதன் நோக்கம் கொள்ளை தானே?


இதைவிடக் குறைவான விலைக்குத்தான் தி.மு.க. ஆட்சியில் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அந்த ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? புதிய ஒப்பந்தங்கள் போட்டு கொள்ளை அடிப்பதற்காகத் தான் பழைய ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டதா?

மின் உற்பத்தியை அதிகரிக்கும் புதிய திட்டங்கள் போடப்பட்டுள்ளதா? இல்லை. மாறாக, வெளிச்சந்தையில் வாங்குவதை அதிகப்படுத்துகிறார்கள். அதுவும் மிகமிகமிக அதிக விலையில் வாங்க இருக்கிறார்கள். எந்த விலையில் வாங்கப் போகிறார்கள் என்பது மட்டும்தான் இப்போது அம்பலம் ஆகி உள்ளது. இதற்குள் நடந்த பேரங்கள் இனி வரிசையாக அம்பலம் ஆகும்.

உபரியாக இருந்த மின்சாரத்தை விற்பனை செய்தது திராவிட மாடல் அரசு. வெளிச்சந்தையில் அநியாய விலைக்கு வாங்கப் போகிறது இந்த திருட்டு சக்தி அரசு.

மாட்டிக் கொண்டதும், 'இது அக்டோபருக்கு மட்டும்தான்' என்று முழிக்கிறார் நிர்மல்குமார். 'ஒரு மாதம் மட்டும் ஊழல் செய்துகொள்கிறோம்' என்று அனுமதி கேட்கிறாரா அமைச்சர்?

தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட் 20 ரூபாய்க்கு வாங்கிய போது, 'மின்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்' என்று சொன்னவர்தான் இன்றைய மின்துறை அமைச்சர் நிர்மல்குமார். இப்போது யூனிட் விலை 35 ரூபாய்க்கு வாங்க ஒப்பந்தம் போட்டு மாட்டிக் கொண்டார்கள் என்றால் அமைச்சர் நிர்மல் குமார் மட்டுமல்ல, முதலமைச்சர் விஜய்யும் சேர்ந்து பதவி விலக வேண்டாமா?



செம்மண் முறைகேடு புகார் தொடர்பாக

முன்னாள் அமைச்சர் க. பொன்முடி மீது அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு ரத்து!

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, அக்.16-

கடந்த 2006-11ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத்துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தபோது, விழுப்புரம் மாவட்டத்தில் செம்மண் வெட்டி எடுத்ததன் மூலம் அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 இழப்பு ஏற்படுத்தியதாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்திருந்தது. முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி, உறவினர் ராஜமகேந்திரன் உள்ளிட்டோர் மீதான வழக்கை விசாரித்த விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்து கடந்த ஏப்ரலில் தீர்ப்பளித்தது.



முன்னதாக, செம்மண் முறைகேடு தொடர்பாககிடைத்தபெருந்தொகைஹவாலா பரிவர்த்தனை மூலம் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளதாகக் கூறி அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த வழக்கில் 2023ம் ஆண்டு சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோர் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுக்களில், மூல வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதால், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது. எனவே, அமலாக்கத் துறை வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கூறப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த, தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மூல வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பொன்முடி உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் அமலாக்கத் துறை வழக்கை தொடர அனுமதிக்க முடியாது எனக்கூறி வழக்கை ரத்து செய்தனர்.

கல்லணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் பாசனத்துக்கு வரவில்லை!

முத்துப்பேட்டை, தஞ்சையில் விவசாயிகள் சாலை மறியல்!

முத்துப்பேட்டை, அக்.16-

கல்லணையில் திறக்கப்பட்ட தண்ணீர் பாசனத்துக்கு வந்து சேராததால் முத்துப்பேட்டை, தஞ்சையில் விவசாயிகள் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் 10 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி நேரடி நெல் விதைப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் முத்துப்பேட்டையில் உள்ள கோரையாறு, மறைக்கா கோரையாற்றில் இது வரை போதுமான தண்ணீர் வரவில்லை. இதன் காரணமாக முத்துப்பேட்டையில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டதால் இடும்பாவனம், கற்பகநாதர்குளம், தெண்டியக்காடு, விளாங்காடு விவசாயிகள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.



இதையடுத்து முத்துப்பேட்டை கோரையாறு, மறைக்கா கோரையாற்றில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடக்கோரி மறைக்கா கோரையாறு பாலம் அருகே 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த அதிகாரிகள் சென்று விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. போராட்டத்தால் முத்துப்பேட்டை வேதாரண்யம் சாலையில் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதேபோல் தஞ்சாவூர் மாவட்டம் உய்யங்கொண்டான் வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்காலுக்கு கல்லணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் இன்னும் வரவில்லை. இதனால் அசூர், பொய்யங்குடி, வல்லம், புதூர், பாளையப்பட்டி, குரும்பூண்டி, ஆச்சாம்பட்டி உள்ளிட்ட 20 கிராமங்களில் 27,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். உய்யங்கொண்டான் வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்து விடக்கோரி செங்கிப்பட்டியில் நேற்று முன்தினம் காலை 12.30 மணியளவில் விவசாயிகள் மறியலில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் செயற்பொறியாளர் திருமூர்த்தி நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. இந்த போராட்டத்தால் தஞ்சை திருச்சி சாலையில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.